# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B) (பாகம் - 24)**

## அரசியலமைப்பின் 17வது. திருத்தச் சட்டம்

இத்திருத்தம் 13.10.2001 அன்று நிறைவேற்றப்பட்டது. சனாதிபதியாலோ அல்லது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினாலேயோ அல்லது ஆளும் கட்சியின் அமைச்சரவையினாலேயோ தீர்மானிக்க முடியாதவாறு ஒரு சுதந்திரமாக செயற்படக் கூடிய கட்சி பாகுபாடற்ற தனிநபர் விருப்பு வெறுப்புக்கு உட்படாத பலரின் ஒருமுக கருத்தை ஒற்றுமையாக வெளிப்படுத்தக் கூடிய அரசியலமைப்புச் சபையொன்றை தாபிப்பதென்பது ஒரு சிறந்த சனநாயக வெளிப்படுத்தலாகும்.

இந்தச் சபையே சுதந்திரமாக செயற்படவேண்டிய சில அரச நிறுவனங்களை சில திணைக்களங்களை சில அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கும். உதாரணமாக சட்டமா அதிபர் கணக்காய்வாளர் நாயகம் போன்றோரையும் தேர்தல் ஆணைக்குழு மனிதவுரிமை ஆணைக்குழு போன்றவற்றின் தலைவர் அங்கத்தவர்கள் ஆகியோரை நியமனம் செய்ய சனாதிபதிக்கு பரிந்துரைக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள சபையாக விளங்கும். இச்சபையினால் பரிந்துரைக்கப்பட்டவர்களன்றி வேறு எவரையும் சனாதிபதி நியமிக்க முடியாது. இது அரச நிருவாகத்தில் சனநாயகத்தை சிறப்பாகப் புகுத்தும் ஒரு அரிய செயற்பாடாகும்.

**1978ம் ஆண்டைய அரசியலமைப்பின் 41வது உறுப்புரையை நேரடுத்து vii அ என்ற ஒரு புதிய அத்தியாயம் உட்சேர்க்கப்பட்டுள்ளது.**

**41 (அ) அரசியலமைப்பு சபை**

இந்த உறுப்புரையில் அரசியலமைப்புச் சபை என்றொரு சபை தாபிக்கப்படும் என்றும் அதன் உறுப்பினர்களாக கீழ் காணப்படுபவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

அ). பிரதம மந்திரி ஆ). சபாநாயகர் இ). எதிர்க்கட்சித் தலைவர் ஈ). சனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர் உ). உயர்ந்த தன்மை நேர்மை மேன்மை வாய்ந்தவர்களாக ஐவர் அவர்களில் மூவர் சிறுபான்மை இனத்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். பிரதம மந்திரியும் எதிக்கட்சித் தலைவருமாக இணைந்து பாராளுமன்றக் கட்சித் தலைவர்களின் ஒருப்பாட்டுடன் அரசாங்க கட்சி எதிர்க்கட்சியை சேராதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் எந்த அரசியல் கட்சியிலும் சாராத அரசியலில் தொடர்பற்றவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் மூன்று வருட காலத்திற்கு உறுப்பினர்களாக செயற்படலாம். இடையில் ஏதாவது காரணத்தினால் ஒரு உறுப்பினர் விலகினால் அல்லது விலக்கப்பட்டால் இரு கிழமைக்குள் அவ்வெற்றிடம் மீண்டும் சனாதிபதியால் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுபவர் எஞ்சியுள்ள காலத்திற்கு மட்டும் உறுப்பினராக செயற்பட முடியும். ஊ). அரசாங்கக்கட்சி எதிர்க்கட்சியல்லாத வேறு பாராளுமன்றத்திலுள்ள சிறு கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பரிந்துரைக்கப்படும் ஒருவர் என மொத்தம் பத்து உறுப்பினர்களைக் கொண்ட சபையாகவிருக்கும்.

இச்சபையின் தலைவராக சபாநாயகர் செயற்படுவார். (உ) (ஊ) பந்திகள் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மீண்டும் ஒரு முறை சபை உறுப்பினராக தெரிவாக முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. தற்போது சிறுபான்மையினத்தின் பிரதிநிதித்துவ உறுப்பினர்களாக நாகநாதன் செல்வகுமரனும் ஜாவிட் யூசுவ்வும் உள்ளார்கள்.

**41 (ஆ)** இந்த உறுப்புரையில் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுக்களின் தலைவர்களையும் அங்கத்தவர்களையும் முன்னைய உறுப்புரையில் தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு சபையின் பரிந்துரையுடன் மட்டுமே சனாதிபதியால் நியமனம் செய்ய முடியும். அவ்வாறான ஆணைக்குழுக்களில் இனவிகிதாசாரப்படியே அங்கத்தவர்களை நியமித்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. விலக்குவதாயின் அரசியலமைப்பு அல்லது வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவும் அல்லது சனாதிபதி அரசியலமைப்பு சபையின் முன்கூட்டிய அனுமதியுடனும் அங்கத்தவர்களை விலக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

**குறித்த அட்டவணையில் குறிப்பட்டுள்ள ஆணைக்குழுக்களாவது**:
1 தேர்தல் ஆணைக்குழு 2. பகிரங்க சேவை ஆணைக்குழு 3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு 4. இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு 5. இலஞ்ச ஊழலை விசாரிக்கும் நிரந்தரமான ஆணைக்குழு 6. நிதி ஆணைக்குழு 7. எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆகியவைகளாகும்.

**41 (இ)** இவ்வுறுப்புரையில் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் பதவியில் உள்ளவர்களின் நியமனங்களெல்லாம் சனாதிபதி பிரேரித்திருந்தாலும் அரசியலமைப்பு சபையினால் அனுமதிக்கப்பட்ட பின்னரே நியமிக்கப்படுவார்கள். அவர்களது விலகலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அல்லது வேறு எழுத்திலான சட்டத்திற்கமைவாக மட்டுமே நடைபெறவேண்டும். உயர் நீதிமன்ற நீதியரசர்கள்: மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்: மேன்முறையீட்டு நீதிபதிகள் ஆகியோரின் நியமனங்கள் தொடர்பாக பிரதம நீதியரசரினதும் சட்டமா அதிபரினதும் அபிப்பிராயத்தை கேட்டறிந்தே நியமனம் செய்யப்படும்.

**குறித்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உயர் பதவிகளாவது:**
பகுதி 1 – பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதியரசர்களும்: மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்: நீதிச்சேவை ஆணைக்குழவின் உறுப்பினர்கள் (தலைவரைத் தவிர)
பகுதி 2. – சட்டமா அதிபர்: கணக்காய்வாளர் நாயகம்: பொலிஸ் மா அதிபர்: நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்: பாராளுமன்ற செயலாளர் நாயகம்:

**41 (ஈ)** அரசியலமைப்புச் சபைக்கான செயலாளரை அந்தச் சபையே தெரிந்தெடுக்கும். சபை தனது தொழிற்பாட்டை செயற்படுத்த தேவையான உத்தியோகத்தர்களை சபை தீர்மானிக்கும் நிபந்தனையுடன் நியமிக்கலாம்.

**41 (உ)** செயலாளர் தேவைக்கேற்பவும் தலைவரின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும் சபையை கூட்டவேண்டும். தலைவர் பங்கேற்காதபோது பிரதமமந்திரி தலைமை வகிப்பார் அவருமில்லாத போது எதிர்க்கட்சி தலைவர் அல்லாது போனால் பிரசன்னமாயிருக்கும் ஒருவரை அன்றைய தினத்திற்கு தலைவராக தெரிவுசெய்து

கூட்டத்தை நடத்தலாம். கூட்டம் கூடுவதற்கான கோரம் 06 உறுப்பினர்கள் ஆகும். எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் கூடியவரையில் ஏகமனதாக இருப்பதாகவே எதிர்பார்ப்பாகும். வருகை தந்தவர்களில் ஐந்து உறுப்பினர்கள் சாதகமாக வாக்களிப்பின் ஏற்கப்படும். சபைத் தலைவருக்கு ஒரு தீர்மானிக்கும் இறுதி வாக்கு உண்டு. 41 (ஆ) 41 (இ) ஆகியவற்றின் கீழ் நியமனங்களை செய்வதற்கு தேவையான நடபடிமுறைமைகளை சபையே தீர்மானிக்கும். (உ) (ஊ) பந்திகளின் கீழ் நியமனம் செய்யப்பட்டவர்கள் முன்கூட்டியே அனுமதி பெறாது அடுத்தடுத்து இரண்டு கூட்டங்களுக்கு சமூகமளிக்க தவறும் பட்சத்தில் அவர்கள் தங்கள் உறுப்பினர் அந்தஸ்தை வெற்றிடமாக்கி விட்டார்கள் எனக் கணிக்கப்படும்.

(தொடரும்)